இந்தியாவிடம் இலங்கை மன்னிப்பு கோர வேண்டும்

(கொழும்பு) இந்திய அரசிடம் இலங்கை அரசு மன்னிப்பு கோரவேண்டுமென சுதந்திரக்கட்சி எம். பி. திரு. அநுர பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளதாக 'சிலுமின' 'சண்டே ஒப்சே (4-ம் பக்கம் பார்க்க)

-11-1991

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

33 திருவள்ளுவர் ஆண்டு 2022 கார்த்திகை 15 இதழ்: 291
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 01-12-1991

கிளிநொச்சி வரை முதலில் மின்சாரம்

(யாழ்ப்பாணம்) வடபகுதிக்கு முதலில் கிளிநொச்சிவரை மின்சாரம் வழங்கக்கூடிய சாத்தியக்கூறுகள் தான் தற்போது இருக்கின்றன இவ்வாறு யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் (4-ம் பக்கம் பார்க்க)

தெற்கில் மீண்டும் வேலை நிறுத்தம்

(கொழும்பு) தேசிய தாதிகள் சங்கம் இன்றுமுதல் வேலைநிறுத்தத்தில் இறங்கவிருக்கிறது தங்கள் கோரிக்கைகளை இதுவரை அரசு நிறைவேற்றாத காரணத் (4ம் பக்கம் பார்க்க)

யாழ். குடாவில் தொடர்ந்து அகோர விமானத் தாக்குதல்

வலி - வடக்கு அதிர்ந்தது

[யாழ்ப்பாணம்]

யாழ். குடாவில் தொடர்ந்து மூன்றுவது நாளாக நேற்றும் அகோர விமானத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. நேற்று மாலை வலி.வடக்கின் பல பகுதிகளில் பல மணி நேரம் குண்டு வீச்சு விமானங்கள் தாக்குதலை மேற்கொண்டன.

று பிற்பகல் 3 மணியிலிருந்து மாலை 6 மணிவரை [illegible] வந்த பொம்மர்கள் கட்டுவன் குப்பிளான், ளைக்கட்டுவன் பகுதிகளில் மாறி மாறி குண்டுகளைப் பொழிந்தன. 10க்கும் மேற்பட்ட குண்டுகள் இப்பகுதிகளில் வீசப்பட்டதால் ஏராளமான வீடுகள், கட்டிடங்கள் சேதமாகின.

இதே நேரம் கட்டுவன், ட்டபுரம், புன்னாலைக்கட்டுவன், குப்பிளான் பகுதிகளிலிருந்து கடுமையான அடபாக்ஸ் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் தொடர்ச்சியான ஷெல் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டன.

பொம்மர்கள், அவ்ரோக்கள், குண்டு வீச்சை மேற்கொண்டதுடன் ரொக்கட், மோட்டார், கலிபர் தாக்குதல்களையும் மேற்கொண்டன. (56-86)

தொடர்ந்து ஊரடங்கு

(கொழும்பு) யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்களில் ஊரடங்குச் சட்டம் தொடர்ந்து அமுலில் இருப்பதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. (மா)

பொம்மர்கள் மீது புலிகள் தாக்குதல்

(காங்கேசன்துறை) வலிவடக்கில் தாக்குதல் நடத்திய பொம்மர்கள் மீது விடுதலைப் புலிகள் நடத்திய எதிர்த்தாக்குதலில் விமானம் (4ம் பக்கம் பார்க்க)

லலித் கோஷ்டி துரிதமுயற்சி

(கொழும்பு) ஐக்கியதேசியக்கட்சி அதிருப்தியாளர்குழு புதிய கட்சியை அமைக்கும் பணியில் தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அதிருப்தியாளர்குழு தாம் (4ம் பக்கம் பார்க்க)

மட்டு - அம்பாறை தளபதி லெப். கேர்ணல் ஜோய் வீரமரணம்

(மட்டக்களப்பு) மட்டக்களப்பில் காட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலில் காயமடைந்து நேற்று அதிகாலை மட்டக்களப்பு - அம்பாறை பிராந்தியத் தளபதி லெப். கேணல் ஜோய் வீரமரணமடைந்தார்.

விசாகன் என்றழைக்கப்படும் ஜோய் (கணபதிப்பிள்ளை ரகுநாதன் கொம்மாதுறை, செங்கலடி. மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் இடம்பெற்ற பல தாக்குதல்களுக்கு தலைமை தாங்கியவர்.

லெப். கேர்ணல் ஜோய் மட்டக்களப்பு - அம்பாறைப் பிராந்தியத் தளபதியாக 1-6-91ல் நியமிக்கப்பட்டார். இவர் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் 1986ம் ஆண்டு சேர்ந்தார். 1987ம் ஆண்டு தொடக்கம் 1991ம் ஆண்டு மே மாதம் 31ம் திகதிவரை விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் திரு. வே. பிரபாகரனின் மெய்ப்பாதுகாவலணியில் முக்கிய போராளியாக கடமையாற்றினார்.

(4-ம் பக்கம் பார்க்க)

தொண்டா முயற்சியை குழப்ப சதி

(கொழும்பு) அமைச்சர் தொண்டமான் மேற்கொண்டுள்ள சமாதான முயற்சியை குழப்ப சில தமிழ் களும் ஆளும் கட்சி சிலரும் முயற்சிப்பதாக தெரிவிக்கப்படுகிறது. ப்பாக தொண்டமான் [illegible] மாத்திரமே அங்கீகரித்திருப்பதால் இந்த குழப்ப முயற்சி திரைமறைவில் நடைபெறுகிறதாம்.

எனினும் ஆளும்கட்சி முக்கியஸ்தர்கள் சிலரும், தமிழ் கட்சி ஒன்றும் தொண்டமானின் முயற்சிக்கு நல்ல ஆதரவு தெரிவித்துள்ளதாம். (சி)

தொண்டாவின் விஷேடகடிதம் மாத்தயாவிடம் கையளிப்பு

(யாழ்ப்பாணம்) விடுதலைப்புலிகளுக்கு அமைச்சர் தொண்டமான் அனுப்பிய விஷேட கடிதத்தை யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு கோ. மகேந்திரராசா (மாத்தையா) விடம் நேற்றுக்காலை ஒப்படைத்தார்.

இக்கடிதத்தை அரச அதிபர் மூலம் அமைச்சர் தொண்டமான் புலிகளுக்கு அனுப்பியுள்ளார்.

இக்கடிதத்தில் அமைச்சரின் சமாதான முயற்சிகளை பல (4-ம் பக்கம் பார்க்க)

சார்க் மாநாடு

[கொழும்பு] சார்க் ஒரு நாள் உச்சி மாநாடு டிசம்பர் மாதம் 21-ம் திகதி அல்லது 22-ம் திகதி கொழும்பில் நடைபெறலாமெனத் தெரிவிக்கப்படுகிறது.

தெற்கில பல இடங்களில் எலும்புக் கூடுகள் மீட்பு

(கொழும்பு) தென்பகுதியில் பல இடங்களிலும் மனித எலும்புக்கூடுகளும், மண்டை ஓடுகளும் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

[illegible], க.வி. மாத்தறை பகுதியிலிருந்தே பல எலும்புக்கூடுகளும், மண்டை ஓடுகளும் மீட்கப்பட்டு தற்போது [illegible] ஆய்விற்காக அனுப்பப்பட்டுள்ளன.

இதேவேளை தேசிய பகுதிகளில் தற்போது பல இளைஞர்கள் வேகமாகவும் [illegible] திடீர் திடீரென காணாமல் செய்யப்பட்டுள்ளது. (ம)

புலிகள் நடவடிக்கைக்கு கருணாநிதியே காரணம்

(சென்னை) தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கை அதிகரிப்பதற்கு முன்னாள் தமிழகமுதலமைச்சர் திரு.மு.கருணாநிதியே காரணமென தமிழக முன்னாள் உள்துறை செயலர் திரு.ஆர். நாகராஜன் குற்றம்சாட்டியுள்ளார்.

[4-ம் பக்கம் பார்க்க]

ஒரு வாரத்தில் 49 இராணுவம் பலி

(கொழும்பு) விடுதலைப்புலிகளின் தாக்குதலினால் இந்த வாரத்தில் மட்டும் 49 படையினர் பலியானதாக இராணுவ தரப்பில் தெரிவிக்கப்படுகிறது

நேற்று முன்தினம் மட்டக்களப்பில் இடம்பெற்ற அதிரடித் தாக்குதலில் 14 படையினர் கொல்லப்பட்டதுடன் 11 படையினர் படுகாயமடைந்தனர்

இதையடுத்து மட்டக்களப்பு மாவட்டத்தில் ஹெலிகொப்டர்கள், விமானங்களின் உதவியுடன் இராணுவத்தினர் காடுகளில் பெரும் தேடுதல்களில் இறங்கியுள்ளார்கள். (மா)

வரி விளம்பரம்

பழைய புத்தகங்கள்

உங்களிடமுள்ள புத்தகங்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் போன்றவை நியாயமான விலையில் கொள்முதல் செய்யப்படும். யாழ் பழைய புத்தகசாலை, 82, அருச்சுனா (விராவலி) வீதி.

[இ-5630]

திருமண சேவை

மறுமணமா? திருமணமா? உங்கள் கவலை தீர ஒருமுறை தொடர்பு கொள்ளுங்கள். ஆண், பெண் சாதகமும் முழு விபரத்துடன் தபால் தலையுடன் விண்ணப்பிக்கவும். புதன் கிழமையில் மட்டும் நேரில். வெளிநாட்டு மணமக்களும் உண்டு. நித்தியகல்யாணி ஏஜென்சி, கோண்டாவில் வீதி, இருபாலை, கோப்பாய்.

(இ-5631)

க. பொ. த. உயர்தரம் 91, 92

க. பொ. த. உயர்தர வகுப்பிற்கு கணக்கியல், அழகு மாணவர்களால் பொருளியல், அளவையியல் வர்த்தகம் ஆகிய பாடங்கள் இல்லங்களுக்கு வந்து கற்பிக்கப்படும். தொடர்பு 85, இவன்சோலை வடி, திருநெல்வேலி.

(சி-5645)

புலமைப் பரிசில் வகுப்பு

சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுத்தரும் எமது நிறுவனத்தால் நடாத்தப்படும் ஆண்டு 4, ஆண்டு 5 புதிய வகுப்புகள் 02-12-91 திங்கள் பி. ப. 4-00 மணிக்கு ஆரம்பமாகின்றன. புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(இ-5647)

தேவை

யாழ். நகரில் பிரபல தாபனத்திற்கு லிகிதர் ஒருவர் தேவை, தகைமைகளுடன் விண்ணப்பிக்கவும். (ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்) விளம்பர இல. இ-5650 சே/பா ஈழநாடு யாழ்ப்பாணம்.

(இ-5650)

பரிசில்கள்

காரைநகர் வாசிகசாலை நல் விருத்திச் சபை புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 32 மாணவர்களைப் பாராட்டி பரிசில்கள் 1991-12-04 விக்டோரியா கல்லூரியிலும் 1991-12-05ல் யாழ் நாவலர் ம. வித்தியாலயத்திலும் பிற்பகல் 3-00 மணிக்கு வழங்கப்படும். சித்தியடைந்த மாணவர்கள் அண்மையில் உள்ள பாடசாலைக்கு சமூகம் தரவும்.

[இ-5653]

ஆதனங்கள் விற்பனை

எம் ஊடாக ஆதனங்கள் விற்பனையாகின்றன. கொள்வனவு செய்வோர் தமக்கு அனுகூலம் கிடைக்கிறதெனும் நம்பிக்கையோடு எம்மை நாடுகிறார்கள். தொடர்பு: எஸ். ஏ. தர்மலிங்கம் 24, புறாடி லேன், கச்சேரி கிழக்கு யாழ்ப்பாணம்.

[இ-5652]

விவாகப் பொருத்துனர்

எமது சேவை மதிநுட்ப சீர்தூக்கலும் எதையும் அலசி ஆராயும் ஆற்றலோடு வெற்றிகரமாக நிறைவேற்றும் திறமை வாய்ந்த அனுபவமுடையதாகவுமுள்ளது பலரது பாராட்டைப் பெற்றுள்ளோம். எம்மை நாடுவோர் திருப்தியடைவர் என்பது நிச்சயம். தொடர்பு: எஸ். ஏ. தர்மலிங்கம் 24, புறாடி லேன், கச்சேரி கிழக்கு யாழ்ப்பாணம்.

(சி-5651)

விற்பனைக்கு

எண்ணெய்க் குளிப்புக்கு இலந்தை வகைகள் கொண்டு தயாரிக்கப்பட்டது. "ஒலிவ் ஸ்நானத்தூள். கண்ணுக்குக் குளிர்ச்சி, கூந்தலுக்கு வளர்ச்சி" 40 கிராம் பக்கற் விலை ரூபா 8/- மட்டுமே எங்கும் கிடைக்கிறது மிகக் குறைவு.

(ஏ-1743)

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

புகையிரதப் பகுதி ஒய்வூதியம்

[யாழ்ப்பாணம்]

மக்கள் வங்கி கன்னாதிட்டி சங்கானைக் கிளைகளில் ஒய்வூதியம் பெறும் ஒய்வூதியர்கள் கார்த்திகை மாதத்திற்குரிய ஒய்வூதிய வவுச்சர்களை மட்டும் வங்கி அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி வவுச்சர்கள் கன்னாதிட்டி மக்கள் வங்கிக் கிளைக்கு நேரில் புகையிரதப் பகுதியினரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராசி பலன்

01:12:1991

ஞாயிற்றுக்கிழமை

(தமிழுக்கு கார்த்திகை 15)

தசமி மு.ப.9-29 வரை, அத்தம் பி.இ. 1-09 வரை, அமிர்த சித்தம், இராகுகாலம் மாலை 4-44 முதல் 6-14 வரை, சுபநேரம் காலை 9-14 முதல் 10-44 வரை.

மேடம்: அயலவர் நேசம், தொழில் சிறப்பு, மகிழ்ச்சி.

இடபம்: மறைமுக வஞ்சனை, கடன் தொல்லை, அலைச்சல்.

மிதுனம்: வீண் தகராறு, மனக்குழப்பம், காரியத்தடை.

கடகம்: தற்பெருமை, அதிக உழைப்பு, பணவரவு.

சிம்மம்: மனைவியுடன் பகை அதிக யோசனை, செலவு.

கன்னி: இனசன மகிழ்ச்சி, நற்செயல், தொழில் லாபம்.

துலாம்: வேண்டாத தொல்லை, வழிவாதங்கள், சோம்பல்.

விருச்சிகம்: குடும்பத்தில் சுபகாரியம், தொழில் சிறப்பு, புகழ்.

தனுசு: தெய்வ சிந்தனை, நண்பர் உதவி, பயணம்.

மகரம்: பெண்பகை, காரியவிக்கினம், விரோதம்.

கும்பம்: வாக்குவாதம், புத்திரர் கவலை, காரியத்தடை.

மீனம்: நண்பர் சகாயம், தொழில் மேன்மை, வெற்றி.

ஜோஸ்யர்

வலி-வடக்கில் 200 பேருக்கு சத்துணவு வழங்கப்பட்டது

(காங்கேசன்துறை)

வலி வடக்கில் கர்ப்பிணிகள் பாலூட்டும் தாய்மார் ஆகியோருக்கான சத்துணவுத் திட்டத்தின்கீழ் இதுவரை 200 பேருக்கு சத்துணவு வழங்கப்பட்டுள்ளது.

வலி. வடக்கு செஞ்சிலுவைச்சங்க கிளை ஊடாக இந்த சத்துணவுகள் வழங்கப்பட்டு வருகிறது.

அகதிமுகாம்களிலும், இடம்பெயர்ந்து வீடுகளிலும் வசிக்கும் பெண்மணிகளுக்கும் இந்த சத்துணவு வழங்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

மாதாந்தம் வழங்கப்படவுள்ள இச்சத்துணவில் அரிசி, மா, சீனி, பருப்புவகை, தேயிலை போன்றவை அடங்குகின்றன. (86)

ஆட்டுக்கடா பராமரிப்பு நிலையங்கள் அமைக்க ஏற்பாடு

(உடுவில்)

சுத்தரோடை, சுன்னாகம், மயிலங்காடு, ஏழாலை, புன்னாலைக்கட்டுவன் ஆகிய இடங்களில் ஆட்டுக்கடா பராமரிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

ஆட்டுக்கடா பராமரிப்பு நிலையங்கள் அமைக்கும் இத்திட்டம் தெல்லிப்பழை கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தினூடாக செயற்படுத்தப்படவுள்ளது.

பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தின்கீழ் உடுவில் உதவி அரசாங்க அதிபர் ஊடாக இத்திட்டத்துக்குத் தேவையான நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

27,000 ஆடுகள் கடலில் மூழ்கிப்பலி

(பெய்ரூட்)

துருக்கியில் உள்ள போஸ்பரஸ் நீரிணையில் இரு கப்பல்கள் நேருக்குநேர் மோதிக்கொண்டதில் 27 ஆயிரம் ஆடுகள் கடலில் மூழ்கி மாண்டன.

லெபனானிலிருந்து ஆடுகளை ஏற்றிக்கொண்டு போஸ்பரஸ் நீரிணையாகச் சென்றுகொண்டிருந்தபோது சீரற்ற காலநிலையால் பிலிப்பைன்ஸ் நாட்டுக் கப்பலொன்றுடன் மோதிக்கொண்டதில் இருகப்பல்களும் கடலில் மூழ்கிக்கொண்டன. இதனால் லெபனான் கப்பலில் இருந்த 27 ஆயிரம் ஆடுகளும் கடலில் மூழ்கி மாண்டன.

மேற்படி இரு கப்பல்களிலுமிருந்து 29 மாலுமிகள் காப்பாற்றப்பட்டபோதிலும்மிகுதி 9 மாலுமிகளைப்பற்றிய தகவல்கள் எதுவும் தெரியவில்லை என்று செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

கண்காட்சி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பட்டின சபை நூல் நிலையத்தில் இடம்பெற்று வரும் மாவீரர் கண்காட்சி நாளை 2ம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய் பட்டினப் பொறுப்பாளர் திரு: வேங்கையனினால் திறந்துவைக்கப்பட்டது. இக்கண்காட்சியினை நாளை 5-30 மணிவரை மக்கள் பார்வையிடலாம்.

மானிப்பாய் சிற்றூர்வையினால் நடாத்தப்படும் இக்கண்காட்சியில் முக்கிய அம்சமாக மாங்குளத்தில் போரிட்டோரின் வீர சாதனையும், ஆனையிறவு, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு மரபுவழிப் போரியல் நிகழ்வுகளின் மாதிரிகளும் வைக்கப்பட்டுள்ளன.

வல்வெட்டித்துறை - நகரசபை

1992ம் ஆண்டிற்கான

கேள்வி அறிவித்தல்

01-01-1992 தொடக்கம் 31-12-1992 வரையிலான காலப்பகுதிக்குள் கீழ்க் குறிப்பிடப்படும் வியாபாரம் சேவைகளுக்கான கேள்விகள் இருபிரதிகளில் 13-12-91ம் திகதி முற்பகல் 10-00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்வி விபரம்	ஆகக்குறைந்த கேள்வித்தொகை	கேள்வி வைப்பு பணம்	படிவக்கட்டணம்
1. மரக்கறிச்சந்தை வல்வெட்டித்துறை	33,000-00	1000-00	100-00
2. மீன் சந்தை வல்வெட்டித்துறை	28,000-00	1000-00	100-00
3. மாட்டிறைச்சிக்கடை	21,000-00	1000-00	100-00
சேவை			
குப்பை கூழங்களை அகற்றுவதற்கு உழவு இயந்திரப்பெட்டி வாடகைக்கு வழங்குதல்		10-000	25-00

மேற்படி வைப்புப்பணமும் கேள்விப் படிவக்கட்டணங்களும் செலுத்தப்படுவதன் பேரில் 11-12-91ம் திகதி நண்பகல் 12-30 மணி வரை வழங்கப்படும் படிவங்களில் மட்டும் கேள்விகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். கேள்விப்படிவக் கட்டணங்கள் மீளளிக்கப்படமாட்டாது. மேற்படி கட்டணங்கள் இவ்வலுவலகத்தில் பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

மேலதிகமான விபரங்களை இவ்வலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

செயலாளர்
நகரசபை - வல்வெட்டித்துறை

நகராட்சிமன்ற அலுவலகம்,
வல்வெட்டித்துறை, 22-11-1991.

(ஏ-1744)

31ம் நாள்

நினைவஞ்சலி



அமரர்

திருமதி அன்னம்மா இரத்தினம்

தோற்றம்: 1906.01-04 சாயிபதம்: 1991.11-01

இரத்தினம் குடும்பத்தினர்

இரத்தினம் அவனியு
கொக்குவில் மேற்கு.
கொக்குவில்.

(சி-5648)

“யாழ்ப்பாணக் குடாநாட்டில் நன்னீரை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்”

விடுதலை புலிகளுக்கும், ஆய்வு நிறுவனத்திற்கும் மகஜர்

(பருத்தித்துறை)

யாழ். குடாநாட்டில் நன்னீர் உவர் நீராக மாறிவரும் பேராபத்தைத் தடுப்பதற்கான துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிட்டால் எதிர்காலச்சந்ததியினர் பலத்த இன்னல்களை அனுபவிக்க வேண்டிவரும் எனவே நன்னீரைப்பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு யாழ். பல்கலைக்கழக விலங்கியல்துறை பேராசிரியரும் வடமராட்சி சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிறுவனத்தி[illegible] பணிப்பாளருமான வி. கே. கணேசலிங்கம் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி, தமிழீழ ஆய்வு நிறுவனம் ஆகியவற்றிடம் மகஜர் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பேராசிரியர் கணேசலிங்கத்தின் கோரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

யாழ். குடா நாட்டிலே வெகுவிரைவில் நன்னீர் உவர் நீராகமாறப்போவதாக நீரியல் மண்ணியல் நிபுணர்கள் அபாய எச்சரிக்கை விடுத்திருப்பது எம்மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. தமிழீழத்திலே நன்னீரைப்பாதுகாக்க வேண்டியதும் நன்னீர் உவர் நீராக மாறும் ஆபத்தைத்தடுக்க வேண்டியதும் முக்கிய பணியாகவுள்ளது இதை நாம் கவனிக்காது விடுவோமாறுல் எமது எதிர்கால சந்ததியினர் சொல்லொணா துயரங்களையும் கஷ்டங்களையும் அனுபவிக்க வேண்டியது தவிர்க்கமுடியாத நிலை ஏற்படும்.

எனவே மரங்களை நாட்ட வேண்டியதும் மழை நீரை வசதியான பகுதிகளில் தேக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதும் மிகமுக்கியமாகும். இந்நிலையிலே பல பகுதிகளில் மழை நீரைத் தேக்கக்கூடிய வசதிகள் இருந்தும் மழைநீரைத் தேக்க வேண்டியதன் முக்கியத்துவத்தினை மகிமையினை அறியாத கிராமிய மக்கள் மழை நீரைத் தேக்கக்கூடிய இடங்களில் இருந்தும் பகீரதப்பிரயத்தனம் செய்து மழைநீரைக் கடலுக்குப்பாய்ச்சி வருவது கண்டு ஆழ்ந்த கவலை அடைய வேண்டியுள்ளது. சில இடங்களில் நீர் நிலைகள் தூர்க்கப்பட்டு வருவதைக் காணமுடிகிறது. நீர்நிலைகள் குளங்கள் தேவையற்ற முறையில் தூர்க்கப்பட்டுமூடப்பட்டு வருவது தடை செய்யப்பட வேண்டும்.

இப்பேராபத்து நிலைகளை நீக்குமுகமாக மழை நீரைத் தேக்குவதற்காக குளங்களை புனரமைப்பதுடன் மழைநீரை தேக்குவதன் முக்கியத்துவத்தையும் மழை நீரை கடலுக்குள் செல்ல விடுவதனால் எதிர்காலத்தில் ஏற்படப்போகும் ஆபத்துகள் பற்றி மக்களுக்கு விளக்குவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். (52)

★ மேற்கு ஜெர்மனியில்

வெளிநாட்டவர்கள் மீதான தாக்குதல்கள் அதிகரிப்பு

(பொன்)

மேற்கு ஜெர்மனியில் தஞ்சமடைந்திருக்கும் வெளிநாட்டு அகதிகள் மீது ''நியூ நாஜீஸ்'' என்ற இயக்கத்தினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் தாக்குதல்கள் அதிகரித்து வருவதாக அங்கிருந்துவரும் தகவல் தெரிவிக்கின்றன.

அண்மையில் மேற்கு ஜெர்மனியில் ''நியூ நாஜீஸ்'' என்ற இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் அங்குள்ள தமிழ் இளைஞர் ஒருவரின் கால்களை வெட்டி துண்டித்துள்ளனர்.

இந்த இயக்கத்தினர் தம்முடன் காஸ் என்னும் தாக்குதல் திரவத்தையும் கொண்டு சென்று வெளிநாட்டவர்களைத் தாக்குவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இத்தாக்குதல்களினால் மேற்கு ஜெர்மனியில் தஞ்சமடைந்துள்ள தமிழர்கள் மிகுந்த அச்சத்துடன் வாழ்ந்துவருவதாகவும் சிலர் அங்கிருந்து அயலில் உள்ள மற்றைய ஐரோப்பிய நாடுகளுக்கு தப்பிச்சென்றுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [72]

தேர்தல் கடமையின்போது

இறக்கும், காயமடையும் அரச ஊழியருக்கு நஷ்டஈடு

(கொழும்பு)

தேர்தல்கடமையின் போது இறக்கும் அல்லது காயமடையும் அரசாங்க ஊழியர்களுக்கு நஷ்ட ஈடு வழங்கப்படும் என்றுபொது நிர்வாக அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து அரச திணைக்களங்களுக்கும் இது தொடர்பான சுற்றறிக்கைகள் அண்மையில் மேற்படி அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

புகலிடம் கோரிய ஆசிரியர் நாட்டைவிட்டு வெளியேற்றம்

அமைச்சுமீது நீதிமன்றம் கண்டனம்

(லண்டன்)

பிரிட்டனில் புகலிடம் கோரிவந்த ஆசிரியர் ஒருவரை நீதிமன்றம் அவருக்கு வழங்கிய உறுதி மொழியையும் மீறி நாட்டைவிட்டு வெளியேற்றதின் மூலம் உள்துறை அமைச்சர் பேக்கர் நீதிமன்றத்தை அவமதித்தார் என்று தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

செயிர் நாட்டைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர் தனது நாட்டில் தான் சித்திரவதை செய்யப்பட்டதாகவும் தனது நாட்டுக்கு திரும்பி போகமுடியாது என்றும் பிரிட்டனில் புகலிடம் கோரியிருந்தார்.

இவர் பிரிட்டனை விட்டு வெளியேற்றப்படமாட்டார் என்று நீதிமன்றம் உறுதி மொழி வழங்கியிருந்தது. இந்த உறுதி மொழி வழங்கப்பட்டு ஒருமணிநேரத்திற்குள் அவர் பிரிட்டனிலிருந்து வெளியேற்றப்பட்டார்.

ஆசிரியர் வெளியேற்றப்படுவதை தடுத்து நிறுத்தவும் வெளியேற்றியபின்னர் அவரை தேடிக்கண்டு பிடித்து மீண்டும் பிரிட்டனுக்கு கூட்டிவர தவறியதற்காக மேன்முறையீட்டு நீதிமன்றம் உள்துறை அமைச்சகத்தை கண்டித்திருக்கிறது.

இந்த ஆசிரியர் விடயத்தில் உள்துறை அமைச்சர் பேக்கர் நீதிமன்றத்தை அவமதித்தார் என்று தீர்ப்பு வழங்கப்பட்டு செலவை தனிப்பட்ட முறையில் செலுத்த வேண்டுமென்று நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருக்கிறது. (மா)

புதிதாகப் பயிற்சி பெற்ற 25 பெண் இராணுவம்

(வவுனியா)

சிறிலங்கா இராணுவத்தின் 4-வது காலாட்படை பிரிவைச் சேர்ந்த 25பெண் இராணுவத்தினர் தமது குறுகிய கால பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறியுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை வவுனியா நகரசபை மைதானத்தில் இவர்களது அணிவகுப்பு மரியாதை இடம்பெற்றது.

கிரிக்கெட்

இந்தியா-239

(மெல்போர்ன்)

இந்தியாவுக்கும் அவுஸ்திரேலியாவுக்குமிடையில் நேற்றுமுன்தினம் மெல்போர்னில் ஆரம்பமான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட், போட்டியின் முதல் நாள் ஆட்ட இறுதியில் இந்திய சகல விக்கெட்டுகளையும் இழந்து 239 ஓட்டங்களைப் பெற்றது.

மனோஜ்பிரபாகர் ஆட்டமிழக்காமல் 54 ஓட்டங்களையும், கபில்தேவ், 44 ஓட்டங்களையும் பெற்றனர். (வி)

அவுஸ்திரேலிய அணி 2விக்கெட் இழப்பிற்கு 235 ஓட்டங்களைப் பெற்றது (வி)

இராணுவ நடவடிக்கையால்

இறந்தோரின் குடும்பங்கள் நஷ்டஈடுகோரி விண்ணப்பம்

(மட்டுநகர்)

இராணுவ நடவடிக்கைகளினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் இறந்துபோன பொதுமக்களின் 5,703 பேரின் குடும்பங்கள் நஷ்டஈடுகோரி அரசிடம் விண்ணப்பித்துள்ளன.

இதில் 2,601 பேரின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு 20 கோடி ரூபா அவர்களுக்கென ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளதாகவும், அதில் 1,107 பேருக்குஇதுவரை 7கோடியே 83 லட்சம் ரூபா வழங்கப்பட்டுவிட்டதாகவும், இதே நேரம் மேற்படி சம்பவங்களினால் படுகாயமடைந்து நஷ்டஈடுகோரி விண்ணப்பித்த 4,593 பேருக்கு 6 கோடியே 88 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், இதில்1980பேருக்கு 78 லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளதாகவும் அரசாங்கத்தின் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. (வி)

புலிகளின் குரல் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

புலிகளின் குரல் வானொலியின் ஓராண்டுநிறைவுதினத்தையொட்டி நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றோர் விபரம்.

சிறுகதைப் போட்டி 1ம்பரிசு திரு நடேசன் குகதாசன் (தலைப்பு - உறுதி), 2ம் பரிசு திரு வல்லையூரான் (தலைப்பு - ஊனங்கள் உடலில் தான்), 3-ம் பரிசு (1) திரு ந கிருஷ்ணசிங்கம் (தலைப்பு-புதிய பாடம்) (2) திரு. துரை சுப்பிரமணியம் (தலைப்பு - வேள்வி)

விமர்சனப் போட்டி: 1-ம் பரிசு (1) திரு. ந கிருஷ்ணசிங்கம், (2) திரு ம முரளீதரன், 2ம் பரிசு திரு. பு. செந்தில்ரூபன்.

கவிதைப்போட்டி: 1ம் பரிசு திரு வே இளையகுட்டி (தலைப்பு-கரும்புலிகளின் தினக்குறிப்பும் கவிதை கூறும்). 2ம் பரிசு திரு. மா. புவனேந்திரராஜா தலைப்பு - (1) தன்மானம்மிக்க தமிழீழக் கனவு, (2) குனிந்த தமிழர் தலைகள் நிமிரும், 3-ம் பரிசு திரு செ. குமாரசாமி (தலைப்பு - வரணி வந்தான்)

வானொலி நாடகப்போட்டி: 1-ம் பரிசு (1) திரு ந கிருஷ்ணசிங்கம் (தலைப்பு - உறவுகள்) (2) திரு. க. சிவராசா (தலைப்பு மாறபட்டும் மனங்கள்), 2-ம் பரிசு திரு. வல்லையூரான் (தலைப்பு - இதுதான் முடிவு).

● யூகோஸ்லாவியாவில்

41 பாடசாலைச் சிறுவர்கள் கொடூரமாக வெட்டி கொலை

(பெல்கிரேட்)

யூகோஸ்லாவியாவில் குரோஷியப் படைகள் 41 பாடசாலை சிறுவர்களை கொடூரமாக வெட்டிக் கொலை செய்துள்ள செய்திகள் தற்போது வெளிவந்துள்ளன.

யூகோஸ்லாவியாவிலுள்ள ஷகோவார் நகருக்கு அருகில் உள்ள கிராமமொன்றின் பாடசாலைக்குள் திடீரெனப் புகுந்த குரோஷியப்படையினர் அங்கு படித்துக்கொண்டிருந்த 41சிறுவர்களை வாளாலும் கத்தியாலும் வெட்டி கொடூரமாகக் கொலைசெய்ததை தான் நேரில் கண்டதாக வெளிநாட்டுப் பத்திரிகையின் படப்பிடிப்பாளர் ஒருவர் தெரிவித்தார்.

மேற்படி கிராமத்தைவிட்டு குரோஷியப்படையினர் வெளியேறும்போது 5 வயதுக்கும் 7 வயதுக்கும் இடைப்பட்ட சிறுவர்கள் பலரைக் கழுத்தை வெட்டி கொலை செய்ததையும் தான் பார்த்ததாக அந்தப் படப்பிடிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

இச்செய்தியை குரோஷிய அரசாங்கம் மறுத்துள்ளபோதிலும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இதுபற்றி விசாரணை செய்துவருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

தொண்டர் ஆசிரியர் நிரந்தரமாக்கப்படுவர்

(கொழும்பு)

''வடக்கு-கிழக்கு மாகாணங்களில் கடமையாற்றும் தொண்டர் ஆசிரியர்களுக்கு, படிப்படியாக, நிரந்தர நியமனம் வழங்கப்படும்'' என்று கடந்த வாரம் கொழும்பிலுள்ள கல்விச் சேவை ஆணைக்குழு காரியாலயத்தில் நடைபெற்ற மகாநாட்டில், கல்வி சேவை ஆணைக்குழுத் தலைவர் திரு. ஜோர்ஜ் மெண்டிஸ் தெரிவித்தார்.

கடந்த வருடம் பெப்ரவரி மாதம் 2ம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானிப்படி, கூடிய தகமையுடைய தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனங்கள் படிப்படியாக வழங்கப்படும் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொண்டர் ஆசிரியர்கள் தற்போதுகடமையாற்றுகின்றார்கள் என்றும், திரு. ஜோர்ஜ் மெண்டிஸ் மேலும் தெரிவித்தார். (வி)

புலமைப் பரிசில் பரீட்சை

41மாணவிகள்சித்தி

(உடுவில்)

1990ம் ஆண்டுக்கான ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் உடுவில் மகளிர் கல்லூரியின் நாற்பத்தியொரு மாணவிகள் சித்தியடைந்துள்ளனர்.

ஆகக்கூடிய புள்ளியான 176 புள்ளியை செல்வன் துஷாந்தி தனபாலசிங்கம் பெற்று சித்தியடைந்துள்ளார்.

புலிகள் உணவை பறிப்பதாக தகவல் எதுவும் இல்லை

- அமைச்சர் ரணில்

(கொழும்பு)

"வடக்கிலுள்ள மக்களுக்கு அரசு அனுப்பும் உணவுப் பொருள்களை விடுதலைப்புலிகள் பறிப்பதாகக் கூறப்படுவது பற்றித் தகவல் ஏதும் எமக்குக் கிடைக்கவில்லை"

இவ்வாறு அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, கொழும்பில் நடாத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் கூறினார்.

"நாம் வடக்கே அனுப்பும் உணவுப் பொருள்களை யாழ். அரச அதிபர் பொறுப்பேற்கின்றார். நாம் அவரை நம்புகின்றோம். அந்த உணவுப் பொருள்கள், விடுதலைப் புலிகளிடம் போய்ச் சேர்கின்றது என்று அரச அதிபர் எமக்கு இதுவரை அறிவிக்கவில்லை" என்றார்.

ஜே. வி. பி. முன்னர் பொருள்களைப் பறிமுதல் செய்தது அப்போது ஏன் இவ்வாறு கேட்கவில்லை; இது இனவாதத்தைத் தூண்டுவதாயுள்ளது என்றும் கூறினார். (வி)

புலிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று திருச்சியில் முதலாவது குற்றவியல் நீதிபதியிடம் ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; 1990ம் ஆண்டு ஜூன் முதல் உள்துறை செயலராக நான் பணியாற்றியபோது அப்போதைய முதல்வரின் உத்தரவுகளை அரச அலுவலர் என்ற முறையில் நிறைவேற்றியதாகவும், தாயகம் திரும்பிய இந்திய அமைதிப் படையை வரவேற்குமாறு தான் விடுத்த வேண்டுகோளை திரு. கருணாநிதி நிராகரித்ததாகவும் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுடன் தொடர்பு வைத்திருந்ததற்காக நவம்பர் மாதம் 26ம் திகதி பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் திரு. நாகராஜன் தமிழக பொலிசாரால் சென்னையில் கைதுசெய்யப்பட்டது தெரிந்ததே. (க)

வாகன விபத்தில் இளம் பெண் பலி

(யாழ்ப்பாணம்)

நெல்லியடி - உடுப்பிட்டி இரும்பு மதவடியில் இடம்பெற்ற லொறி-மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளில் வந்த ஒரு இளம் பெண் பலியானார். இருவர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உடுப்பிட்டியைச் சேர்ந்த திருமதி மகேஸ்வரி குணரத்தினம் (40 வயது) என்பவரே யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துவரப்படுகையில் மரணமானார்.

இவரது கணவரான இராஜரட்ணம் குணரத்தினம் (40-வயது) மகள் செல்வி றேமினி குணரட்ணம் (8 வயது) காயப்பட்டவர்களாவர். (56)

கச்சதீவு உடன்படிக்கை

இந்தியா மீண்டும் பரிசீலனை செய்யாது

(புதுடில்லி)

கச்சதீவு தொடர்பான இலங்கை-இந்திய உடன்படிக்கையை இந்திய அரசு மீண்டும் மீள் பரிசீலனை செய்யமாட்டாது.

இது தொடர்பாக நீண்டகாலம் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் பின்னர் இலங்கை - இந்தியக் கடல் எல்லை உடன்படிக்கை 1984-ம் ஆண்டும், 1986-ம் ஆண்டும் கைச்சாத்திடப்பட்டன.

இந்திய வெளிவிவகார அமைச்சு இந்த உடன்படிக்கை மீள் பரிசீலனை செய்யப்படமாட்டாது என்று தெரிவித்துள்ளது.

அனுமதி அட்டை

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதிகளிலிருந்து கல்விப் பொதுத் தராதரப் பரீட்சைக்கு தோற்றும் (1990/1991) தனிப்பட்ட பரீட்சார்த்திகள் தங்கள் அனுமதி அட்டைகளை யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரா கல்லூரியில் இயங்கும் வேலணைக் கோட்டக் கல்வி அலுவலகத்தில் திங்கட்கிழமை பெற்றுக்கொள்ளலாம். [152]

இந்திய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வர்' பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

இந்தியப் படைகளுடன் மோத விடுதலைப் புலிகளுக்கு இலங்கை அரசு ஆயுதம் வழங்கியதாகக் கூறியே அரசு மன்னிப்பு கோரவேண்டுமென திரு. அநுரா தெரிவித்துள்ளாராம்.

இது குறித்து திரு. அநுராவை கண்டித்து மேற்படி இரு பத்திரிகைகளும் ஆசிரியர் தலையங்கங்கள் எழுதியுள்ளன. (இ)

கிளிநொச்சி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கர் தெரிவித்தார்.

"வடபகுதியின் பெருவாரியான மின்சாரம் இல்லாமல் சீரழிந்துபோவதை கருத்திற்கொண்டே மின்சாரத் தடையை நீக்குகின்றேன்" என்று கூட்டுப்படைத் தளபதி ஜெனரல் ஹமில்டன் வணசிங்கா யாழ். அரச அதிபரிடம் கூறியதாகவும் தெரியவருகின்றது

மாங்குளத்தில் சேதமடைந்த மின்கோபுரம் உடனடியாகத் திருத்தம் செய்யப்பட்டதும், கிளிநொச்சிவரை மின்சாரம் வந்துவிடும். அதன்பின்பு ஆனையிறவுப்பகுதியில் சேதமடைந்த மின்கோபுரங்கள் திருத்தம் செய்யப்பட்டபின்பே யாழ். மாவட்டத்துக்கு மின்சாரம் வரும். இவை அனைத்துக்கும் தேவையான சகல வேலைகளையும் செய்வதற்கும் திட்டமிடுவதற்கும் மிக விரைவில் வடபகுதி மின்சாரசபைப் பொறுப்பதிகாரி கொழும்பு செல்ல இருப்பதும் குறிப்பிடத்தக்கது. (வி)

திருத்தவேலைக்கு 30 லட்சம் ரூபா

(யாழ்ப்பாணம்)

குருநகரில் உள்ள அரசு உணவுக் களஞ்சியத்தை திருத்தம் செய்வதற்கு அரசு 30 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

அண்மையில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகளினால் மேற்படி களஞ்சியத்தின் ஒரு பகுதி முற்றாக சேதமடைந்துள்ளது தெரிந்ததே.

யாழ் மாவட்டத்தில் ராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்து அகதிகள் முகாம்களில் தங்கியிருக்கும் அகதிகளுக்கு தற்காலிக குடிசைகளை அமைத்துக் கொடுப்பதற்காக ஒரு கோடி ரூபாவையும் அரசு வழங்கியுள்ளது. (வி)

தேங்கிக் கிடக்கும் அனுமதி அட்டைகள்

(யாழ்ப்பாணம்)

க. பொ. த. (சாதாரண) பரீட்சைக்குத் தோற்ற இருக்கும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் பெருமளவில் யாழ் தபால் நிலையத்தில் தேங்கிக்கிடப்பதாக அதிபர் தெரிவித்துள்ளார்.

பெரும்பாலான அனுமதி அட்டைகளில் முகவரிகள் தெளிவில்லாமலிருப்பதால் உரியவர்களுக்கு விநியோகிக்க முடியவில்லை. இதுவரை அனுமதி அட்டைகளைப் பெறாத பரீட்சார்த்திகள் உடனடியாக யாழ். தபாலகத்துடன் தொடர்புகொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர், (வி)

அரசியல் அம்பலத்தை மறைக்கவே கொலை

(கொழும்பு)

அத்தனகல்ல - வஹலை கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட முதலாம் எதிரியான முன்னாள் பொலிஸ் பரிசோதகர் அத்தனகல்ல நீதிமன்றத்தில் சுட்டுக் கொல்லப்பட்டதில் பல அரசியல் பின்னணிகள் இருப்பதாகத் தற்போது தெரிவிக்கப்படுகிறது.

இப்பிரதேசத்தின் ஒரு கட்சிப் பொறுப்பாளர், கொலைப்பட்ட பொலிஸ் பரிசோதகரைப் பயன்படுத்தி பல அரசியல் எதிர்ப்பாளர்களைக் கொலை செய்வித்ததாகவும், அதைப் பொலிஸ் பரிசோதகர், வழக்கில் வெளியிட்டுவிடுவார் என்ற அச்சத்தின் காரணமாக மேற்படி நபரை ஆள் வைத்துச் சுட்டுக்கொன்றிருக்கலாமென்றும் பரவலாக தெரிவிக்கப்படுகிறது. (மா)

மட்டு - அம்பாறை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

15-7-91ல் மொறக்கொட்டாஞ்சேனையில் நடைபெற்ற மோதலில் 10 ஆயுதங்களை கைப்பற்றியதில், 2-8-91ல் கல்லிச்சை - வடமுனையில் நடைபெற்ற மோதலில் 20 ஆயுதங்களை கைப்பற்றியதில் 11-10 91ல் சித்தாண்டி பொலிஸ் நிலைய முற்றுகைத் தகர்ப்பு அத்துடன் பொலிஸ்காரர்களை உயிரோடு கைது செய்தது ஆகியன இவர் தலைமையேற்று நடத்திய தாக்குதல்களில் முக்கியமானவையாகும்;

தலைவர் பிரபாகரனை மையமாகவைத்து இந்தியப்படை மணலாற்றில் நடாத்திய செக்மேற் நடவடிக்கை தாக்குதல் முறியடிப்பில் இவர் முக்கிய பங்குவகித்தார்.

மணலாற்றில் இந்தியப்படை அதிகாரி கேர்ணல் [illegible] கொல்லப்பட்ட தாக்குதலில் இவர் ஆர். பி. ஜி. ஆயுதத்தோடுசென்று முக்கிய தாக்குதலை மேற்கொண்டாராம். யாழ். கோட்டை முகாம் மீதான பல தாக்குதல்களிலும் முக்கிய பங்கை வகித்தார்.

இவரது புகழுடம்பு நேற்று மாலை தீயுடன் சங்கமமாகியது.

நேற்று முன்தினம் மட்டக்களப்பில் இடம்பெற்ற தாக்குதல்களில் வீரமரணமடைந்த லெப். கேணல் ஜோய் 2-ம் லெப். ரூபன், வீரவேங்கை சுகன் ஆகியோருக்கு புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று முன்தினம் இராணுவத்துடனான மோதலில் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் வருமாறு:

ஏ. கே. எல். எம். ஜி 1, ஏ கே. எல். எம். ஜீ ரவை இணைப்புகள் 92, ரி. 56 ரக துப்பாக்கி 1, ரி. 56-1 ரக துப்பாக்கிகள் 2, 56-2 ரக துப்பாக்கிகள் 2, இவற்றிற்குரிய ரவைக் கூடுகள் 17, ரி 81 ரக துப்பாக்கிகள் 2, ரி. 81 ரக துப்பாக்கிகளுக்குரிய ரவைக் கூடுகள் 6, 7.62 ரக நடுத்தர ரவைகள் 1739, ரி. எம். ரி. ரக குண்டுகள் 6. (மா)

சுதந்திரக்கட்சியில் சந்திரிகா இணைந்தார்

(கொழும்பு)

மஹஜனக் கட்சித் தலைவி சந்திரிகா குமாரணதுங்க நேற்றுக்காலை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் சேர்ந்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா தமது மகன் அநுராவின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் மகள் சந்திரிகா குமாரணதுங்காவை கட்சியில் இணைத்துள்ளார்.

லலித் கோஷ்டி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கள் செய்த வழக்கின் தீர்ப்பு நாளை மறுதினம் 3ந் திகதி வழங்கப்படவிருக்கிறது.

இதேவேளையில் நாடு தழுவிய ரீதியில் கட்சி அமைப்பாளர்களை நியமிக்கும் பணியில் அதிருப்தியாளர் குழுவினர் ஈடுபட்டுள்ளனர். (மா

தொண்டாவின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முன்னேற்ற செய்திகள் அமைந்திருப்பதாகவும் கொழும்புத் தகவல்கள் கூறுகின்றன. (வி-சி)

பொம்மர்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கள் உயரப்பறந்தன.

நேற்றுமாலை தாக்குதல் நடத்திய பொம்மர்கள் விடுதலைப்புலிகளின் எதிர்த் தாக்குதலால் உயரப்பறந்து பல முறை வட்டமிட்டபின் உயரத்திலிருந்தே தாக்குதலை மேற்கொண்டன. (86)

தெற்கில் மீண்டும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தால் இந்த வேலைநிறுத்தில் குதித்துள்ளதாக தேசிய தாதிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அரச சேவையாளரின் தொழிற்சங்க கூட்டு முன்னணியும் நியாயமானசம்பள உயர்வு தங்களுக்கு வழங்காவிடில் வேலைநிறுத்தத்தில் இறங்குவதாக அரசுக்கு அறிவித்துள்ளது. (மா)

45-ம் நாள் நினைவஞ்சலி

2-ம் லெப். ஜீவன்

[கனகு லதீஸ்வரன் - புத்தூர்]

[அண்மையில் தீவகத்தில் சிறிலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடிமோதலில் வீரமரணம்]

வீரஜனனம்: 18 - 06 - 1973

வீரமரணம்: 18 - 10 - 1991

வாழ்வின் அர்த்தத்தை
இரத்தத்தால் எழுதிச் சென்றவனே
புகழுடலைப் புதைத்த உன்
புதைகுழியின் மேலே
வீறுகொண்டு மலரும் புரட்சிப் பூக்களை
மாலையாகப் புனைந்து - தமிழ்
அன்னைக்கே காணிக்கையாக்கி - உன்
ஆத்ம சாந்திக்காய் நித்தமும்
அமைதியாகப் பிரார்த்திக்கின்றோம்.

தீவக மக்கள்

(இ-5656)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் [illegible] யாழ்ப்பாணம் [illegible] மேற்கு வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 01-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under licence Number B/10536/91.